முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இராமநாதபுரம் விற்பனைக் குழுவில் போதிய நிதிவசதி இல்லை. எனவே, அந்த விற்பனைக் குழுவிற்குத் தேவையான நிதிவசதி பெருகியவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 493, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. திரு. காஞ்சி பன்னீர்செல்வம் கேட்கிறார், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

493—

விவசாயிகளுக்கு தார்பாய் மானிய விலையில் வழங்கல்

*15620—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு தார்பாய் மானிய விலையில் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஒரு தானியசேமிப்புக் கலன்/தார்ப்பாய்க்கு 50 சதவிகிதம் மானியத்தில் அதிகபட்சமாக ரூ.1,000 வீதம் 20,000 எண்கள் உள்ள தார்ப்பாய்கள் மற்றும் தானிய சேமிப்புக் கலன் ரூ. 2 கோடி அளவில் வழங்குவதற்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இவ்வாண்டு வழிவகை செய்திருக்கிறார்கள்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தார்ப்பாயைத் தருகிறேன் என்று சொன்னதற்கு முதலிலே நன்றியைத் தெரிவித்து, வசதியுள்ள விவசாயிகள் அறுவடைக்குப் பின்னாலே நெல்லைத் தனிமைப்படுத்துவதற்கு கலன் அமைத்துக்

1993 ஏப்ரல் 27]

கொண்டு செய்கிறார்கள். குறைந்த அளவிலே நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிற விவசாயிகள் கலன் இல்லாமல் ரோட்டிலே போட்டு அடித்து, அங்கே செல்கின்ற போக்குவரத்துக்குக்கூட சில கிராமங்களிலே இடையூறாக, அந்தக் களத்திலே கதிரை அடிக்கின்றார்கள். அதுபோன்ற நிலைமைகளை மாற்றுகின்ற வகையிலே நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு ஏழை விவசாயிகளுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் நெல்லை அடிப்பதற்கு களத்தை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யுமா என்று நான் மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், அதுவும் குறிப்பாக, குறுவை நெல் சாகுபடி செய்து அறுவடை செய்யும் நேரங்களில் ஒரு பக்கம் மழை, இன்னொரு பக்கம் நெற்கதிரைக் கொண்டுபோய் அடித்து நெல்லைப் பிரிப்பதற்கு வேண்டிய வசதிகள் தமிழகத்தில் இல்லை. அத்துணைக்கும் மேலாக மேலிருந்து விழும் மழை நீரில் அந்த நெல் மூழ்கி, மீண்டும் அந்த நெற்கள் எல்லாம் முளைக்கக்கூடிய வாய்ப்பு உருவாகிவிடுகிறது. எனவே, இதைத் தடுப்பதற்குத்தான் களம் இல்லாதவர்கள், அந்தத் தார்ப்பாயைப் போட்டு, அந்தக் களத்தைப் பயன்படுத்துவதற்கும், தானியங்களைச் சேமித்து வைப்பதற்கும் மழையிலிருந்து காப்பதற்கும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் தார்ப்பாயை இவ்வாண்டு வழங்கியிருக்கிறார். ஏழை எளிய சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களுடைய விளைநிலங்களிலிருந்து வரக்கூடிய நெற்கதிர்களை அடிப்பதற்கு வேண்டிய கலன்களை, சமுதாயக் கலன்களாக உருவாக்கித் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார் என்பதை மட்டும் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் தார்ப்பாய் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அந்தத் தார்ப்பாய்கள் எந்த 'சைஸிலே' கொடுக்கப்படுகின்றன. விவசாயிகள் வைத்திருக்கும் நிலத்தின் அளவின் அடிப்படையிலே அவைகள் கொடுக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுடைய விவசாயிகளை வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் தேர்வு செய்வார்கள்.

வேளாண் பொறியியல் கூட்டுறவு இணையத்தில் சென்று அந்த விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய அளவு, எந்த ரகத் தார்ப் பாய்கள் வேண்டுமென்று அவர்களே தேர்வு செய்து கொள்ளலாம். அப்படி அவர்கள் தேர்வு செய்யக்கூடிய அந்தத் தார்ப்பாய்க்கு 50 சதவீத மானியத்தை அரசு வழங்கும். அது அதிகபட்ச மாக 1,000 ரூபாய் மானியம் என்று நிர்ணயம் செய்திருக் கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 494, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 495, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

495—

போளூர் சத்துணவு மையங்களுக்கு புதியக் கட்டிடங்கள்.

*11750—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூரில் உள்ள புரட்சித்தலைவர் சத்துணவு மையங் களுக்கு புதியதாக கட்டிடங்கள் கட்டித்தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூகநலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய கட்டிடங்கள் கட்டித்தர அரசு முன்வரும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். அதே நேரத்தில் போளூரைப் பொறுத்தவரை யில் 10 சத்துணவு மையங்கள் இருக்கின்றன. 10 சத்துணவு மையங்களுக்கும் ஒரு கட்டிடம் கூடக் கிடையாது. ஆகவே, போளூர் தேர்வுநிலை பேரூராட்சியில் உள்ள சத்துணவு மையங்களுக்கு கட்டிடங்கள் கட்டித்தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரில் 10 சத்துணவு மையங்கள் இல்லை. 72 சத்துணவு மையங்கள் இருக்கின்றன.